


சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் தூய்மைப்பணியாளர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து நேற்று முன்தினம் (24.07.2025) நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மற்றும் தமிழ்நாடு தூய்மை பணியாளர் நலவாரியத்தின் தலைவர் டாக்டர்.திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி ஆகியோர் தூய்மைப் பணிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியம் துணைத் தலைவர் செ.கனிமொழி பத்மநாபன், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர் செ. ரமேஷ். கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) நே.பொன்மணி, சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### தூய்மைப் பணியாளர் நல வாரியத் தலைவர் திப்பம்பட்டி ஆறுச்சாமி முன்னிலையில்

# சேலத்தில் 159 தூய்மைப் பணியாளர்களுக்கு நல உதவிகள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்!

சேலம், ஜூலை 26 -

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன், தமிழ்நாடு தூய்மை பணியாளர் நலவாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி ஆகியோர் 159 தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில், தமிழ்நாடு தூய்மை பணியாளர் நலவாரியத்தின் தலைவர் டாக்டர்.திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி முன்னிலையில் சேலம் மாவட்டத்தில் தூய்மைப்பணியாளர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்த ஆய்வு கூட்டம் நேற்று முன்தினம் (24.07.2025) மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியம் துணைத் தலைவர் திருமதி செ.கனிமொழி பத்மநாபன், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர் செ. ரமேஷ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி நே.பொன்மணி, சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி முன்னிலையில் சேலம் மாவட்டத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கு என செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டம் நேற்று (24.07.2025) மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசியதாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அனைத்து விதமான பொதுமக்களும் அரசின் திட்டங்கள் மூலம் பயன்பெற்று வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டுமென பல்வேறு நல வாரியங்களை உருவாக்கி தந்துள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் தற்பொழுது அனைத்து வாரியங்களும் செம்மையாக நடைபெறும் வகையில் மிகுந்த அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில் தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராக சேரும் அனைவருக்கும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை, விபத்து மரணம், இயற்கை மரணம், ஈமச்சடங்கு, விபத்தினால் உடல் ஊனம், திருமணம், மகப்பேறு உதவித்தொகைகள் விடுதியில் தங்கி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கான உதவித்தொகை, முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் அவர்கள் தூய்மைப் பணியாளர்கள், விவசாயிகள், மாணவ மாணவியர்கள், தொழிலாளர்கள், நெசவாளர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் பயனடையும் வகையில் சிறப்பான ஆட்சியினை நடத்தி வருகிறார்கள். தூய்மைப் பணியாளர்கள் தங்களது பணியின்போது மிகுந்த கவனத்துடனும், விழிப்புணர்வுடனும் பணியாற்றிட வேண்டும். அரசால் வழங்கப்பட்டுள்ள அனைத்து பாதுகாப்பு உபகரணங்களையும், முழுமையாக உபயோகப்படுத்தி பாதுகாப்புடன் பணியாற்றிட வேண்டும்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு தூய்மை பணியாளர் நலவாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி பேசியதாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தூய்மைப் பணியாளர்களின் நலன் காத்திடும் வகையில் 2007 ஆம் ஆண்டு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தினை ஏற்படுத்தி தந்தார்கள். முதலமைச்சர் அவர்கள் 2021 -ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்பேற்றவுடன் தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்திற்கென தனியாக அரசு அலுவலகத்தை உருவாக்கி தந்து ஆண்டிற்கு ரூ.15 கோடி நிதி ஒதுக்கி இவ்வாரியம் சிறப்பாக செயல்பட பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

தூய்மைப்பணியாளர்களுக்கு அரசின் அனைத்து விதமான நலத்திட்ட உதவிகளும் விரைந்து சென்று சேர்த்திடும் வகையில் தூய்மைப்பணியாளர்களின் நலவாரியத்தின் தலைவராக என்னை நியமித்தமைக்கு எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். கொரோனா கால கட்டத்தில் தனது உயிரையும் பொருட்படுத்தாமல் நமது இன்னுயிரை காக்க பாடுபட்ட அனைத்து தூய்மைப்பணியாளர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். பொது மக்களின் சுகாதாரத்தை பேணி காக்கும் தூய்மைப் பணியா ளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட தமிழ்நாடு அரசு தொடர்ந்து பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. கிராமப்புறங்களில் பணியாற்றி வரும் தூய்மைப் பணியாளர்களின் ஊதியத்தை உயர்த்தி வழங்கிட அரசிற்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் மூலம் சமூக நலத் திட்ட உதவிகள், தூய்மைப் பணிபுரிவோர் மற்றும் அவர்களது வாரிசுதாரர்களுக்கு, விபத்து மற்றும் இயற்கை மரணம், ஈமச்சடங்கு, கல்வி உதவித் தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் கண் கண்ணாடி ஆகியவற்றுக்காக உதவித்தொகை கடந்த காலங்களில் தமிழ்நாடு அளவில் மொத்தம் 9,649 நபர்களுக்கு ரூ4.38 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கான அனைத்து திட்டங்களும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில், சேலம் மாவட்டத்திற்கு 178 நபர்களுக்கு ரூ.23.20 இலட்சம் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று சேலம் மாவட்டத்தில் 30.06.2025 வரை தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தில் 1974 ஒப்பந்த பணியாளர்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டை (Smart Card) வழங்கப்பட்டுள்ளது. தூய்மைப் பணியாளர்கள் தங்களது குழந்தைகளை வருங்காலத்தில் நல்ல கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்தி தந்து அவர்களை வாழ்க்கையில் வெற்றியாளர்களாக உருவாக்கிட வேண்டும் இவ்வாறு தமிழ்நாடு தூய்மை பணியாளர் நலவாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி அவர்கள் பேசினார்.

இதனைத்தொடர்ந்து சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், தமிழ்நாடு தூய்மைப்பணியாளர் நலவாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி ஆகியோர் 159 நபர்களுக்கு தூய்மை பணியாளர்களுக்கான நல வாரிய அட்டை, கல்வி உதவித்தொகை, ஈமச்சடங்கு நிதியுதவி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியம் துணைத் தலைவர் திருமதி.செ. கனிமொழி பத்மநாபன், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர் செ. ரமேஷ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி நே.பொன்மணி, சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் ஜெயக்குமார், மாவட்ட மேலாளர் (தாட்கோ) சு.சக்திவேல் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பெரம்பலூர் மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் 102 வது பிறந்த நாளை சிறப்பிக்கும் வகையில் பெரம்பலூர் மாவட்ட நிர்வாகம், பார்வை இழப்பு தடுப்புச்சங்கம் மற்றும் ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. இணைந்து நடத்திய மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம் கொளக்காநத்தம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது , இந்த முகாமிற்கு ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளரும், முன்னாள் ஒன்றிய குழு தலைவருமான என்.கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ராகவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்தார். இம்முகாமில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வ.சுப்ரமணியன், மாவட்ட அமைப்பாளர்கள் எம். சுந்தரராசு, குமார், அன்புச்செல்வன், பாலமுருகன், இளவரசு, ஒன்றிய நிர்வாகிகள் ராமசாமி, புகழேந்தி, எழில்ராஜ், பிரபு உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அரியலூர் நகரத்தைச் சேர்ந்த கழக மூத்த முன்னோடி மொழிப்போர் தியாகி ஜெயராமன் அவர்களின் இல்லம் சென்று அன்னாரின் உடல்நலம் குறித்து நலம் விசாரித்தார். உடன் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, நகர கழக செயலாளர் இரா.முருகேசன், நகர் மன்ற தலைவர் சாந்தி கலைவாணன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் கழக தோழர்கள் உள்ளனர்.



நீலகிரி மாவட்டம், கோத்தகிரி நகராட்சி காந்தி மைதானத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை, அரசு தலைமை கொறாடா கா.ராமச்சந்திரன் நேற்று முன்தினம் (24.07.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் கே.எம்.ராஜ்[6], கோத்தகிரி நகர்மன்ற தலைவர் ஜெயகுமாரி உட்பட பலர் உள்ளனர்.

### கரூரில் – 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

# ரூ.3.39 இலட்சம் மதிப்பில் நல உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

கரூர், ஜூலை 26 -

"உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் 18 பயனாளிகளுக்கு ரூ. 3.39 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்.

கரூர் மாநகராட்சி வார்டு எண்28 மற்றும் 1 பகுதிகளுக்கு தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்களில் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமையில் 18 பயனாளிகளுக்கு ரூ. 3.39 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு மக்களிடம் மிகப்பெரிய வரவேற்பை பெற்று தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது கரூர் மாவட்டத்தில் 3 மாதங்களில் 179 இடங்களில் நடைபெறவுள்ளது. கடந்த 15.07.2025 அன்று தொடங்கி 23 முகாம்கள் நடந்து முடிந்துள்ள நிலையில் கடந்த 23.07 2025 வரை 16,743 மனுக்கள் வரப்பெற்றுள்ளது. இதில் 6.577 மனுக்கள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை" பெறுவதற்கான கோரிக்கை மனுக்கள் ஆகும்.

"உங்களுடன்ஸ்டாலின்" திட்ட முகாமில் வருவாய்த் துறை, மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகிய துறைகளில் வழங்கப்படும் சேவைகளில் பெயர் மாற்றம் உள்ளிட்ட மனுக்களுக்கு தொடர்புடைய துறைகள் மூலம் அன்றைய தினமே தீர்வு காணப்படுகின்றன. ஒரு சில மனுக்களுக்கு ஒரு வாரம் எடுத்துக்கொள்ளப்பட்டு விசாரித்து தகுதியுடையோருக்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இம்முகாம்கள் மூலம் பொதுமக்கள் அளிக்கும் மனுக்களுக்கு அதிகபட்சம் 45 நாட்களுக்குள் தீர்வு காணப்பட வேண்டுமென முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்கியுள்ளார்கள். திராவிட மாடல் அரசின் மீதுள்ள நம்பிக்கையில் தான் பொதுமக்கள் தங்களின் கோரிக்கை மனுக்களுக்கு உரிய தீர்வு கிடைக்கும் என ஆர்வத்துடன் மனுக்களை அளித்து வருகிறார்கள். எனவே அரசு அலுவலர்கள் அம்மனுக்களை பரிசீலித்து தகுதியுடையோருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார்.

இதனைத் தொடர்ந்து மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் சார்பாக 1 நபருக்கு ரூ. 9.542 மதிப்பீட்டிலான காது கேட்கும் கருவி கூட்டுறவுத்துறையின் சார்பாக 5 பயனாளிகளுக்கு ரூ. 3.30 இலட்சம் மதிப்பிட்டில் கால்நடை பராமரிப்பு கடனுதவி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பாக 6 பயனாளிகளுக்கு வகுப்புச் சான்று மற்றும் பிறப்பிடச் சான்று உள்ளிட்ட சான்றிதழ்களையும், எரிசக்தி துறையின் சார்பாக 1 நபருக்கு மின் இணைப்பு பெயர் மாற்றத்திற்கான ஆணை, கரூர் மாநகராட்சியின் சார்பாக 5 நபர்களுக்கு பிறப்புச் சான்று மற்றும் சொத்து வரி பெயர் மாற்றத்திற்கான ஆணைகளையும் என மொத்தம் 18 பயனாளிகளுக்கு ரூ. 3.39 இலட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை செந்தில்பாலாஜி வழங்கினார்.

இம்முகாமில் மாநகராட்சி மேயர் வெ. கவிதா, மாநகராட்சி ஆணையர் கே.எம். சுதா, துணை மேயர் ப. சரவணன், மண்டலக்குழு தலைவர் எஸ்பி. கனகராஜ். மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### என்.கிருஷ்ணமூர்த்தி தலைமை! பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம்,

# அயினாபுரம் கிராமத்தில் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் – தலைமைக் கழக பேச்சாளர் எழும்பூர் கோபி பங்கேற்பு!

பெரம்பலூர், ஜூலை 26 -

தி.மு.க. அரசு பொறுப்பேற்று நான்கு ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள், தெருமுனை கூட்டங்கள் உள்ளிட்டவை நடத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம், அயினாபுரம் கிராமத்தில் ஒன்றிய கழகச் செயலா ளர் என்.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு, கொளக்காநத்தம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் என்.ராகவன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வ.சுப்ரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் பாலமுருகன் அனைவரையும் வரவேற்றார்.

இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், தலைமைக் கழக பேச்சாளர் எழும்பூர் கோபி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இதில் மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். கிளை கழகச் செயலாளர் கருணாகரன் நன்றியுரையாற்றினார்.



ஈரோடு மத்திய மாவட்டம், பவானி ஒன்றியத்திற்கு உட்பட்ட கவுந்தப்பாடி ஊராட்சியில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமை மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாச்சலம் ஆய்வு செய்தார். நிகழ்வில் பவானி தெற்கு ஒன்றிய கழக துணைச் செயலாளர் சத்தியமூர்த்தி, பொருளாளர் விஜயகுமார், சலங்கபாளையம் பேரூர் செயலாளர் பழனிச்சாமி, முன்னாள் ஊராட்சி மன்ற கவுன்சிலர் ஏவிஎம்.பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கருணாகரமூர்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.